முதன்மைச் செயலர்/ஆணையர் (வ.வ.)
30 செப் 2015
சென்னை 600 005

கூடுதல் ஆணையர் (ம.தொ.)
சேப்பாக்கம்
- 1 அக் 2015
சென்னை-600 005
வணிகவரி ஆணையர் அலுவலகம்

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – **"கிருமி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

அரசாணை (டி) எண். 390

நாள்: 23.09.2015
மன்மத, புரட்டாசி 06,
திருவள்ளுவர் ஆண்டு, 2046

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/28576/2015, நாள் 15.09.2015 தேர்வுக்குழு எண்.59/2015–2016.

------

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"கிருமி"** திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் **"கிருமி"** என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. **"கிருமி"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண். | உறுப்பினர் திருவாளர்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1. | S.M.சரஸ்வதி, இணை ஆணையர் (செயலாக்கம்), (இடை மாநில புலனாய்வுக்குழு) சென்னை–6. | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் தமிழில் பெயரிடப்பட்டுள்ளது. இருப்பினும், திரைப்படம் முழுவதும் வன்முறைக் காட்சிகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. சமுதாய நோக்குடன் எவ்வித கருத்தும் சொல்லப்படவில்லை. கதையின் கரு, காட்சிகள் யாவும் தமிழ் நாகரீகத்தின் கலாச்சாரத்தையோ பண்பாட்டையோ மேம்படுத்துவதாக இல்லை ஆகிய காரணங்களுக்காக, அரசாணையின் விதிமீறல் அடிப்படையில், **கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரைக்கிறேன்.** |
| 2. | க.அன்னை, துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித்துறை | 'U' சான்றிதழ் பெற்ற படம். திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளது. இத்திரைப்படத்தில் ஆபாசமில்லை. வன்முறைகள் சற்று அதிமாக உள்ளது. அரசாணையின் நிபந்தனைக்கு உட்படாததால் **வரிவிலக்கு அளிக்கத் தகுதியற்றது என்று பரிந்துரைக்கிறேன்.** |

| | | |
|---|---|---|
| 3. | சங்கர் கணேஷ், இசையமைப்பாளர் | அரசாணைக்கு உட்பட்டது இல்லை அதனால் இந்தப்படத்திற்கு வரிவிலக்களிக்க இயலாது. 1) 'U' சான்றிதழ் உள்ள படம் 2) தமிழில் பெயர் உள்ள படம் 3) பெண்களை இழிவு செய்யவில்லை 4) பிறமொழி இல்லாத படம் 5) வன்முறை அதிகம் உள்ளதால் **வரிவிலக்களிக்க இயலாது.** |
| 4. | A.L.ராகவன், பழம் பெரும் பின்னணிப் பாடகர் | படத்தின் தலைப்பு தமிழ் பெயர் கொண்ட 'U' சான்றிதழ் பெற்ற படம் ஆபாசம் இல்லை. அரசாணையின்படி வரிவிலக்கு அளிக்கக்கூடிய படமாக அமையவில்லை. வன்முறை அதிகம் உள்ளது. **வரி விலக்கு அளிக்க தகுதியில்லாத படம் வரிவிலக்கு அளிக்க வேண்டாம்.** |
| 5. | L.R.ஈஸ்வரி, பின்னணிப் பாடகி | படத்தின் தலைப்பு தமிழில் இருந்தாலும், அரசாணையின் நிபந்தனைக்கு உட்படாததால் **வரி விலக்கு அளிக்கத் தகுதியற்றது என்று பரிந்துரைக்கிறேன்.** |
| 6. | M.N.ராஜம், பழம்பெரும் நடிகை | தமிழ் பெயர் கொண்ட படம், 'U' சான்று பெற்றது. ஆபாசம் இல்லை, அரசாணையின் நிபந்தனைக்கு உட்பட்டதாக இல்லை. வன்முறை அதிகமாக உள்ளது. **வரிவிலக்கு அளிக்க வேண்டாம்.** |

4. மேற்கண்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகளை ஆய்வு செய்ததில், **"கிருமி"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை நிலை எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் **"கிருமி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/9/2015

பிரிவு அலுவலர்.
23/9/15